

தந்தை பெரியார் 146வது பிறந்த நாளையொட்டி அவரது திருவுருவச் சிலைக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, சமூக நீதி உறுதிமொழி எடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகரன், சுப.சரவணன், செ.அசோக்பாண்டியன், எம்.லியாகத்அலி, இராசு.சந்தோஷ், அ.ரெத்தினம், எம்.வேலுச்சாமி, செந்தாமரை பாலு, வே.ராஜேஷ், சி.அரங்கநாயகம், க.கவிவேந்தன், மு.கலைஞர் கருணாநிதி, இராம. செல்வராஜ்,ஆ.மரிய எட்வின், மா.மணிவேலன், புதுநகர் குமார், கி.சுப்பிரமணியன், டி.அப்புக்காளை, வி. ஏ. டி.சி ராஜேந்திரன், மு.க.அறிவுடைநம்பி, பா.ரெங்கராஜ், ஆ.ஜேம்ஸ், எம்.பால்ராஜ், கே.எம்.எஸ்.குமார், தியாகு, முத்துக்கருப்பன், ஏ.எல்.கணேசன், பெர்னாட்ஷா, ஆர்.சபாபதி ராம.பாலு, ரவி, மாரியப்பன், பிரேம் ஆனந்த் , வழக்கறிஞர் ஆனந்த் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# முரசொலியின் வரலாறு!

- மாணவர் நேசன் 1941ல் கைப்பிரதி தொடங்கப்பட்டது.
- முரசொலி மாதம் இருமுறை 10.8.1942 தொடக்கம்.
- முரசொலி வார ஏடாக 14.1.1948–ல்
- பெரியார் பிறந்த இந்நாளில் தான் 17.9.1960 நாளிதழாக மலர்ந்தது.
- இந்நாள் செப்டம்பர் பெரியார் பிறந்த நாள் 17.9.1879.
- கழகம் தொடங்கப்பட்ட நாள் 17.9.1949
- **முரசொலி நாளிதழாக மலர்ந்த நாள் 17.9.1960**

நீலகிரி மாவட்டத்தில்

# 388 சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.37.35 கோடி கடனுதவி!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கி பேச்சு!

*நீலகிரி, செப்.19 -*

நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊரக வளர்ச்சிமற்றும் ஊராட்சி துறையின் சார்பில், சுற்றுலாத்துறை அமைச்சர் . ராமச்சந்திரன் 388 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 766 பயனாளிகளுக்கு ரூ.37.35 கோடி மதிப்பில் கடனுதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் சார்பில், மதுரை மாவட்டம், ஒத்தக்கடை வேலம்மாள் காம்பவுண்ட் பகுதியில் நடைபெற்ற அரசு விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாடு முழுவதும் மகளிர் சுய உதவிக் குழுக்

களுக்கு ரூ.2,735 கோடி மதிப்பில், வங்கிக் கடன் வழங்கும் பணிகளை தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான மாபெரும் வங்கி கடன் உதவிகள் வழங்க வேண்டும் என தெரிவித்ததன் அடிப்படையில், நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் 9.9.2024 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை கா.ராமச்சந்திரன் கலந்து கொண்டு, 388 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த 766 பயனாளிகளுக்கு ரூ.37.35 கோடி மதிப்பில் கடனுதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட மகளிர் சுய உதவிக்குழுக்களை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிபொறுப் பேற்றதும் மகளிர் சுய உதவிக்குழுக்களின் கடன்களை இரத்து செய்தார்கள்.

ஆண்களுக்கு நிகராக மகளிர்களும் முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு கடனுதவிகள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. கடனுதவிகள் பெறும் மகளிர் சுய உதவிக்குழுக்கள் எந்தவொரு தொழில் தொடங்கினாலும், அதனை ஆர்வத்துடனும், முழு ஈடு பாட்டுடனும் மேற்கொண்டு வந்தால், அந்த தொழிலில் நீங்கள் இலாபம் ஈட்டி, வெற்றி பெற முடியும். சுய தொழில் துவங்கும் மகளிர்கள் முறையாகவும், தெளிவாகவும் திட்டமிட்டு செயல்பட வேண்டும். முதலமைச்சர் அவர்கள், நமது மாநிலத்தின் வளர்ச்சியை 2030க்குள் 1 டிரில்லியன் டாலராக உயர்த்த வேண்டும் என்பதற்காக பல்வேறு நாடுகளுக்கு சென்று தொழில் முதலீட்டா ளர்களை சந்தித்து, முதலீட்டா ளர்கள் மாநாடு நடத்தியதன் மூலம் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளது.

தற்போது கூட அமெரிக்கா சென்று பல்வேறு புதிய தொழில் துவங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதன் மூலம் நமது மாநிலத்தில் தொழில் துவங்கப்பட்டால், அரசுக்கு வரி வருவாய் கிடைக்கும். இந்திய அளவில் தமிழ்நாடு அதிகளவு ஜிஎஸ்டி கட்டுவதில்; மூன்றாவது இடத்தில் உள்ளது.

இந்நிகழ்ச்சியின் வாயிலாக மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகளை வைத்து, மகளிர்கள் சொந்தமாக தொழில் துவங்கலாம். மேலும், விவசாயம், தேயிலை மற்றும் காபி தோட்டங்களை குத்தகைக்கு எடுத்தல், மண்பாண்டம் தயாரித்தல், நீலகிரி தைலம் தயாரித்தல், தேன் எடுத்தல், தேங்காய் எண்ணெய் தயாரித்தல், தையல் மற்றும் எம்பிராய்ட்ரி தொழில் போன்ற வாழ்வாதார தொழில் மேம்பாட்டிற்காக பயன்படுத்தி, அதன் மூலம் சுய உதவிக்குழு உறுப்பினர்களாகிய நீங்கள் மற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கலாம். இதனை கருத்திற்கொண்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடனுதவிகளை வழங்கி அவர்களின் பொருளாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில் நமது மாவட்டத்தில், இன்று நடைபெறும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக 388 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 766 பயனாளிகளுக்கு ரூ.37.35 கோடி வங்கி கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்

கீழ், 2 பயனாளிகளுக்கு இணை மானிய நிதி யின் கீழ், தலா ரூ.4.90 இலட்சம் மதிப்பில் கடனுதவிகளும் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசு பெண்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக, கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ரூ.1,000 உரிமைத்தொகை, விடியல் பயணம், புதுமை பெண் திட்டம், விதவை ஓய்வூதியம், 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத்திட்டம், பெண்களுக்கு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்கும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு தங்களது பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, சுற்றுலாத் துறை அமைச்சர், மகளிர் திட்டம், தாட்கோ, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மாவட்ட தொழில் மையம், மாவட்ட முன்னோடி வங்கி, வாழ்ந்து காட்டுவோம் உள்ளிட்ட அரசுத்துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்ட இயக்குநர் காசி

நாதன், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் (பொ) திருமதி. திலகவதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் தயாளன், உதகை நகரமன்றத்தலைவர் திருமதி. வாணீஸ்வரி, உதவி திட்ட அலு வலர்கள் அருண்குமார், திருமதி.ஜெயராணி, சாந்தசீலன், வாழ்ந்து காட்டுவோம் திட்ட அலுவலர் வசந்த், ஊராட்சி ஒன்றியத் தலை வர்கள் மாயன் (எ) மாதன் (உதகை), ராம்குமார் (கோத்தகிரி), 6வது வார்டு உறுப்பினர் திருமதி. வனிதா, மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த மகளிர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஈ.வெ.ரா அவர்களின் பிறந்த தினமான செப்.17 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அறிவிப்பிற்கிணங்க ”சமூக நீதி நாள்” முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில், இனமான பேராசிரியர் அரங்கத்தில் ‘சமூகநீதி நாள்’ உறுதிமொழி மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில் ஏற்கப்பட்டது. இந்நிகழ்வில் நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர். இரா.மாயவன் மற்றும் மாநில, மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. ஒன்றிய, நகர, பேரூர் –

# மாணவர் அணி நிர்வாகிகளுக்கான நேர்காணல்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வேண்டுகோள்!

*நாமக்கல், செப். 19 -*

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க ஒன்றிய, நகர, பேரூர் - மாணவர் அணிக்கான நேர்காணல் குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், கழக மாணவர் அணி செயலாளர் அவர்கள் அறிவித்துள்ளதற்கிணங்க நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கான ஒன்றிய, நகர, பேரூர், மாணவர் அணிக்கான நேர்காணல் வரும் 21.09.2024 அன்று காலை 8.00 மணிக்கு நடைபெற உள்ளது. நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர், மாணவர் அணிக்காக விண்ணப்பித்த அனை



வரும் இந்நேர்காணலில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் வரும் 21.09.2024 அன்று காலை 8.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில், பேராசிரியர் கூட்டரங்கில் நடைபெற உள்ளது. இதில், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.தமிழரசன், கே.பொன்ராஜ், வி.ஜி.கோகுல் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். எனவே, மாணவர் அணிக்கு விண்ணப்பித்துள்ள தகுதியான விண்ணப்பதாரர்கள் கல்விச் சான்றிதழ், உறுப்பினர் அட்டை, கழகத்தில் ஆற்றிய பணிகள் குறித்த அனைத்து விபரங்கள் மற்றும் உரிய சான்றுகளுடன் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கு வருகை புரிய வேண்டும் என கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேட்டுக் கொண்டுள்ளார்.


தமிழ்நாடு அரசு

**நெடுஞ்சாலைத்துறை**

**(கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம், சேலம்.**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.27/2024–2025/தவஅ/நாள்: 16.09.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப் பொறியாளர் (நெ), க(ம)ப, சேலம் வட்டம் அவர்களால், **தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி (நெ) க(ம)ப கோட்டங்களைச் சார்ந்த 2024–25 ஆண்டிற்கான இரண்டு சி.ஆர்.ஐ.டி.பி. பணிகள் (சிப்பம் 98 மற்றும் 99)** மற்றும் **ஒரு திட்டம் சாரா பணி (சிப்பம் 100)** ஆகியவற்றிற்கு இணையவழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **17.10.2024 – 15.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள், பெறப்படும் நாள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **http://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **23.09.2024 முதல்** தெரிந்துக் கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**க(ம) வட்டம், சேலம்**

செ.ம.தொ.இ/3732/ஒப்பந்தப்புள்ளி/2024


# நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் சமூக நீதி நாள் உறுதிமொழி ஏற்பு!

*நாமக்கல், செப் 19-*

நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில் ஈ.வெ.ரா அவர்களின் பிறந்த தினமான செப்.17 அன்று நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் அறிவிப்பிற்கிணங்க “சமூக நீதி நாள் ” உறுதிமொழி ஏற்கப்பட்டது.

ஈ.வெ.ரா., பிறந்த தினமான செப்டம்பர் 17ஆம் தேதி ஆண்டுதோறும், “சமூக நீதி நாள்”ஆக கடைப் பிடிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில், இனமான பேராசிரியர் அரங்கத்தில் ‘சமூகநீதி நாள்’ உறுதிமொழியை மாவட்ட அவைத்தலைவர் சி.மணிமாறன் தலைமையில் ஏற்கப்பட்டது.

இந்நிகழ்வில் நாமக்கல் மாநகராட்சி மேயர் து. கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர். இரா.மாயவன், மாநில நிர்வாகி இரா.நக்கீரன், மாவட்ட பொருளாளர் ஏ.கே.பாலச்சந்திரன், நாமக்கல் மேற்கு நகர செயலாளர் அ.சிவக்குமார், நாமக்கல் ஒன்றிய செயலாளர் வி.கே.பழனிவேல், சார்பு அணி நிர்வாகிகள் வ. இளம்பரிதி, பி.கிருபாகரன், ராஜவேல், முரளி, நாசர்பாஷா, கடல் அரசன் எஸ்.கார்த்திக் மற்றும் வார்டு செயலாளர், மாமன்ற உறுப்பினர்கள், கழக உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகரம் கிட்டப்பா அங்காடி அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் 116வது பிறந்தநாளை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா சிலைக்கு மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், மாவட்டக் கழக துணை செயலாளர் எஸ். செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர் எம். அப்துல் மாலிக், அமிர்த விஜயகுமார், மாவட்ட சார்பு அணி எம்.கே .மருது,செல்வராஜ், ஸ்ரீதர், சௌமியன் நகர நிர்வாகிகள் மலைக்கோயில் பிரபாகரன், வை. தெய்வநாயகம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# வேலூர் மண்டல பொறியாளர் அணிக் கூட்டம்!

*வேலூர், செப். 19 -*

வேலூர் மண்டல திமுக பொறியாளர் அணியின் ஆய்வுக் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

பொறியாளர் அணியின் மாநிலச் செயலாளர் கருணா, மாநிலத் தலைவர் துரை கி.சரவணன், மாநில துணைச் செயலாளர்கள் உமா காந்த், நரேந்திரன், பிரதீப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ். கே.பி. கருணா பொறியாளர் அணியின் புதிய உறுப்பினர்களை இணைக்க QR Code அச்சிடப்பட்ட அட்டையை வழங்கி, பொறியாளர்களை புதிதாக இணைக்க ஆலோசனை வழங்கினார்.

பிறகு அனைத்து மாவட்ட மினிட் புத்தகத்தை ஆய்வு செய்தார். இதில் வேலூர் மாவட்ட அமைப்பாளர் கே.ஆர்.அசோக், திருவண்ணாமலை தெற்கு மாவட்ட அமைப்பாளர் ராம் காந்த், ஆகியோர் கலந்து கொண்டனர்.



தந்தை பெரியார் 146 வது பிறந்த நாள் சமூக நீதி நாளக திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பாக கொண்டாடப்பட்டது. மாவட்ட கழக செயலாளரும், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான, அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழிகாட்டுதலின் பேரில். தந்தை பெரியாரின் ஒவ்வொரு பிறந்த நாளும் ”சமூக நீதி நாளாக கடைப்பிடிக்க வேண்டும் என்று கழக தலைவர் அவர்கள் அறிவித்தற்கிணங்க மறைந்த தந்தை பெரியார் அவர்களின் பிறந்தநாளான 17.09.24 அன்று மாநகர செயலாளரும் மண்டல தலைவருமான மு.மதிவாணன் தலைமையில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.என். சேகரன், மாநில அணி நிர்வாகிகள் கவிஞர் சல்மா, செந்தில், முன்னிலையில் திருச்சி மாநகர கழகத்துக்கு உட்பட்ட காட்டூர் பகுதியில் அமைந்துள்ள தந்தை பெரியாரின் திருஉருவச் சிலைக்கு மாலை அணிவித்து ”சமூக நீதி நாள் உறுதி மொழியை” ஏற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் செங்குட்டுவன், துணைமேயர் திவ்யா, பகுதி கழகச் செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ், விஜயகுமார், சிவகுக்மார் மண்டல குழு தலைவர் ஜெயநிர்மலா மற்றும் மாநில, மாவட்ட,மாநகர நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள். மாவட்ட, தொகுதி அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள். உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் கழக தொன்டர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.